Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

12.01.2021 செவ்வாய்க்கிழமை

## போர் வெற்றித் தூபியா அமையப்போகின்றது?

### சந்தேகத்துடன் கேள்வி எழுப்புகிறது தமிழ் சிவில் சமூக அமையம்

*யாழ்ப்பாணம், ஜன. 12*
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் நினைவுத் தூபி அழிக்கப்பட்ட இடத்திலேயே மீள அதனை அமைப்பேன் எனச் சொல்லி அடிக்கல் நாட்டியிருப்பதை நாம் நம்பத் தயாராக இல்லை. இனப்படுகொலையை நினைவு கூரும் தூபியை நீக்கி பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டது போல 'சமாதானத் தூபியோ' அல்லது 'போர் வெற்றி தூபியோ' 2

நினைவுத் தூபி அமைப்பு

## உரிய தரப்பினருடன் கலந்துரையாடப்படும்

### துணைவேந்தர் தகவல்

*யாழ்ப்பாணம், ஜன. 12*
புதிதாக அமைக்கப்படவுள்ள தூபி தொடர்பில் உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடப்படும். அந்தத் தூபி நிச்சயமாகப் பெயரைக் கொண்டிருக்கும். இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறி சற்குணராஜா தெரிவித்தார்.
ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு துணைவேந்தர் வழங்கிய செவ்வியில், இடிக்கப்பட்ட நினைவுத் தூபியை மீளக்கட்டி 2

## 15 ஆம் திகதி வரை வடக்குக்கு மழை

*யாழ்ப்பாணம், ஜன. 12*
இலங்கைக்கு தென் கிழக்கே வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள காற்ற முத்த தாழ்வு நிலை 2

## யாழ்ப்பாணத்தில் 149.3 மி.மீ. மழை

*யாழ்ப்பாணம், ஜன. 12*
யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 149.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என வளி மண்டலவியல் 2

## 358 குடும்பங்கள் யாழில் பாதிப்பு

*யாழ்ப்பாணம், ஜன. 12*
தொடர் மழை காரணமாக இன்று மதியம் வரையில் 358 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 47 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 57 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளனர் எனவும் யாழ்ப்பாண மாவட்டச் செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ,இ)




# இரண்டு வாரங்களுக்கு வவுனியா நகர் முடக்கம்

### சுகாதாரத் திணைக்களம் அறிவிப்பு

**வவுனியா, ஜனவரி 12**
**வவுனியா நகரிலுள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளை உடனடியாக முடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றாளர்களை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.** 2

## வவுனியாவில் 4 பேருக்கு தொற்று

*வவுனியா, ஜன. 12*
வவுனியாவில் மேலும் நான்கு பேருக்கு இன்று மதியம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 2

## வவு.மருத்துவமனையில் 3 பேருக்கு தொற்று

*வவுனியா, ஜன. 12*
வவுனியா மருத்துவமனைப் பணியாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் மூவருக்கு தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்கு 2

## கச்சதீவு திருவிழாவுக்கு பக்தர்களுக்கு அனுமதியில்லை

*யாழ்ப்பாணம், ஜன. 12*
எதிர்வரும் பெப்ரவரி மாதம் 26ஆம் மற்றும் 27ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழாவில் இந்திய இலங்கை பக்தர்களுக்கு 2

## இப்படியும் திருட்டு! மக்களே உஷார்!!!

*யாழ்ப்பாணம், ஜனவரி 12*
மழை வரப் போகின்றது. உடுப்பு மாற்றுவதற்கு இடம் தாருங்கள் என்று கேட்ட பெண், வீட்டிலிருந்த நகைகளை திருடிச் சென்றுள்ளார். வீட்டார் பெண்ணின் நடத்தையில் சந்தேகமடைந்து 2



நீதிமன்ற அவமதிப்பு

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 ஆண்டுகள் கடூழிய சிறை

*கொழும்பு, ஜன. 12*
இலங்கையில் பெரும்பாலான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் மோசடி நிறைந்தவர்கள் என்று நீதிமன்றை, நீதித்துறையை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட குற்றச்சாட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக் 2

# வான்பாய்கின்றன கிளிநொச்சி குளங்கள்

- இரணைமடுவின் 14 வான் கதவுகளும் திறப்பு
- தாழ் நிலப்பகுதி மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை
- அவதானத்துடன் செயற்படுமாறு கோரிக்கை

*கிளிநொச்சி, ஜன.12*
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்ப்பாசனக் குளங்களும் வான் பாய்கின்றன. அந்தவகையில் இரணைமடு குளம், கல்மடுக்குளம், அக்கராயன் 3



# இரண்டு வாரங்களுக்கு....

112 பேர் கடந்த ஒரு வாரத்தினுள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் இந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 2 ஆயிரம் பேருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பி.சி.ஆர். சோதனையின் முடிவுகளைப் பொறுத்து மாவட்டம் முழுவதையும் முடக்குவதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் இன்று காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மகேந்திரன், வவுனியா பிரதேச செயலர் பிரிவில் 19 கிராம அலுவலர் பிரிவுகளில் முழுமையான முடக்கத்தை மேற்கொள்ளுமாறு மாவட்டச் செயலருக்கு பரிந்துரைத்துள்ளோம். ஏ 9 வீதியில் நொச்சிமோட்டை பாலம் மற்றும் இரட்டை பெரியகுளம் பகுதியில் அமைந்துள்ள நகர சபையின் வரவேற்பு வளைவு, மன்னார் வீதியில் நெளுக்குளம் பொலிஸ் நிலையம், பூந்தோட்டம் சந்தி, மாமடு சந்தி ஆகிய பகுதிகள் பொலிஸாரால் முடக்கப்படும். வவுனியா நகருக்கு உள்ளே வரும் பொது மக்களுக்கு தடைவிதிக்கப்படும். இன்றிலிருந்து இரண்டு கிழமைகளுக்கு இந்த நடைமுறை நீடிக்கும். அவசர தேவைகள், அத்தியாவசிய தேவைகள், அரச ஊழியர்கள் வந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தரும் பேருந்துகள், முடக்கப்பகுதிக்குள் நிறுத்தாமல் செல்வதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது, என்றார்.
இதற்கு அமைவாக வீதித் தடைகள் அமைக்கப்பட்டு பிரதேசங்கள் நேற்று மாலை 3 மணியிலிருந்தே பொலிஸாரால் முடக்கப்பட்டுள்ளன. (ஓ,110)

# போர் வெற்றித் தூபியா....

அமைக்கப்படலாம் என்று நாம் அஞ்சுகிறோம். நாம் எப்படி எவ்வாறு எதனை நினைவு கூர வேண்டும் என்பதனை நாமே தீர்மானிக்க வேண்டும். இருந்த தூபி இருந்தவாறே மீள அமைக்கப்பட வேண்டும். வேறெந்த தீர்வும் திணிப்பே தவிர வேறொன்றும் இல்லை என்பதை தமிழ் சிவில் சமூக அமையம் சுட்டிக்காட்டியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்திருந்த முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட பொதுமக்களின் நினைவுச் சின்னம் அழிக்கப் பட்டமை தொடர்பாகத் தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப்பேச்சாளர்களின் ஒப்பத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.
அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
இந்த நினைவுச் சின்ன அழிப்புக்கு மூல காரணமாக இருப்பவர்கள் பேரினவாத அரசும், அதன் ஆயுதப் படைகளும், அதன் கருத்தியற் படைகளில் ஒன்றான பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவும் என்பதை மிகுந்த கண்டனத்துடன் சுட்டிக் காட்டுகிறது.
பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை மேலும் கடுமையாகப் பாதித்து, எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய இந்த விடயத்தில், விரிவான பல்கலைக் கழக சமூகம் உள்ளிட்ட தரப்பினருடன் உரையாடி, ஆலோசனைகளைப் பெற்று இவ்விடயத்தைக் கையாண்டிருக்க வேண்டிய துணைவேந்தரும், பல்கலைக் கழக நிர்வாகத்தினரும், குறுகிய சுய இலாபங்களின் அடிப்படையில் அநீதியாளர்களின் கைப்பாவைகளாக மாறி, அவர்களின் நோக்கங்களை நிறைவேற்றியது மட்டுமல்லாது அதற்கான நியாயப் படுத்தல்களையும், கருத்தியல் வியாக்கியானங்களையும் வழங்கியதை ஒரு சமூக அநீதிச் செயற்பாடாகக் கருதி மிக வன்மையாகக் கண்டிக்கிறது.
தமது வார்த்தைகளாலும் செயல்களாலும் தமது சொந்த சமூகத்தின் உணர்வுகளைக் காயப்படுத்திய துணைவேந்தரும், பதிவாளரும் மக்களிடம் நிபந்தனையற்ற, பகிரங்க மன்னிப்பைக் கோர வேண்டும் என எதிர்பார்க்கிறது.
நினைவு கூரும் உரிமை ஒரு அடிப்படை மனித உரிமை. அதனை மீள நிலை நிறுத்துவதற்குத் தேவையான அனைத்து அறவழிச் செயற்பாடுகளிலும் தொடர்ச்சியாக ஈடுபட வேண்டும் எனத் தனி நபர்கள், சமூக நிறுவனங்கள், அரசியற் கட்சிகள் என அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.
எமது பாவனைப் பொருள்கள், பண்பாட்டு நிகழ்வுகள், கலை இலக்கிய முயற்சிகள் என அனைத்து வழிமுறைகளூடாகவும், குறியீட்டு வடிவில் எமது நினைவு கூர்தலும், நினைவு கூரும் உரிமைக்கான போராட்டமும் முன்னெடுக்கப் பட வேண்டும் என அவாவி நிற்கிறது. தமிழ் அரசியல் கட்சிகள், கட்சி சார் அரசியற் செயற்பாடுகளுக்கு மேலாக, எமது தேசிய இனத்தின் மீது பிரயோகிக்கப் படும் அனைத்து அடக்கு முறைகளுக்கு எதிராகவும், சரிநிகர் சமானமாக இந்த நாட்டில் வாழ்வதற்கான உரிமைகளுக்காகவும், பொதுவான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி முன்னெடுக்க வேண்டும் எனவும் வேண்டிக்கொள்கிறது, என்றுள்ளது. (ஓ,5)

## வவுனியாவில்...

சனிக்கிழமை மில் வீதியில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் இருவருக்கும், வவுனியா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட இருவருக்கும் தொற்று இன்று மதியம் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. (ஓ,19)

## உரிய தரப்பினருடன்...

அமைதிக்கான நினைவுத் தூபியாக அறிவிக்க முடிவு செய்துள்ளோம். புதிய தூபி பழையதை போன்றே அமைப்பில் ஒத்திருக்கும். ஆனால் பதிவுகளில் அமைதிக்கான தூபியாக அழைக்கப்படும். எனினும் குறித்த தூபியானது அமைதிக்கான தூபியா போர் நினைவுத் தூபியா என்று அறிவிக்கும் எந்தவொரு எழுத்தும் இருக்காது, என்று குறிப்பிட்டதாக அந்தச் செவ்வியில் கூறப்பட்டிருந்தது.
இது தொடர்பில் துணைவேந்தரை தொடர்பு கொண்டு கேட்டபோது, தூபி அமைப்பது தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடியே நடவடிக்கை எடுக்கப்படும். அமைக்கப்படும் தூபி நிச்சயம் பெயரைக் கொண்டிருக்கும், என்றார். இதேவேளை அமைக்கப்படுவது சமாதானத் தூபியா என்று கேட்டதற்கு, இப்போது அவசரம் தேவையில்லை. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி உரிய வகையில் அது அமைக்கப்படும் என்று பதிலளித்தார். (ஓ,5)

## 15 ஆம்...

காரணமாக எதிர்வரும் 15ஆம் திகதி அதிகாலை வரையில் அல்லது 14ஆம் திகதி இரவு வரையில் மழை தொடர்ந்து பெய்யும் என்று, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார். (ஓ,5)

## யாழ்ப்பாணத்தில்...

திணைக்களம் தெரிவித்துள்ளது. யாழ்ப்பாண நகரப் பகுதியிலேயே அதிகளவு மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ,20)

## வவு.மருத்துவமனையில்...

பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பட்டானிச்சூரைச் சேர்ந்த சிற்றூழியர் ஒருவருக்கும், நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவருக்கும் நேற்றைய தினம் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவர்களுக்கு இன்று காலை பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேவேளை இன்று காலை நிர்வாகப் பிரிவைச் சேர்ந்த மற்றொரு பணியாளருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வவுனியா நகரில் தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில், மருத்துவமனைப் பணியாளர்களும் தொற்றுக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,5)

## கச்சதீவு....

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக அனுமதி வழங் கப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்திய துணை தூதரக அதிகாரி, நெடுந்தீவு பங்குத்தந்தை மற்றும் யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் அடங்கிய ஆலோசனைக் கூட்டத்தில் இது முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ,இ)

# இப்படியும் திருட்டு!...

அவரை, ஊரவர்களுடன் சேர்ந்து விரட்டிப் பிடித்து வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று மதியம் இடம்பெற்றது. தொண்டமனாறு பகுதியில் பெண் ஒருவர் பல வீடுகளுக்குச் சென்று வந்துள்ளார். அவர் தான் பொதுச் சுகாதார பரிசோதகர் என்றும், தாதிய உத்தியோகத்தர் என்றும், வெள்ள இடர் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க வந்தவர் என்றும் பல்வேறு விடயங்களைக் கூறி நோட்டம் விட்டுள்ளார். ஒரு வீட்டினுள் சென்று வெள்ளம் தொடர்பான ஒளிப்படங்களை எடுத்துள்ளார். பின்னர் மழை வரப் போகின்றது, தனக்கு உடை மாற்ற இடம் தருமாறு கேட்டுள்ளார். வீட்டாரும் அறையினுள் உடை மாற்ற அனுமதித்துள்ளனர். உடை மாற்றி விட்டு சிறிது நேரத்தில் வெளியில் வந்துள்ளார். வீட்டாரிடம், தனக்கு சாப்பாடு கொண்டு வந்துள்ளார்கள் என்று கூறிக் கொண்டு வீதிக்கு வேகமாகச் சென்று மோட்டார் சைக்கிளில் இன்னொருவருடன் தப்பிச் சென்றுள்ளார்.
இதனால் சந்தேகமடைந்த வீட்டார், அறையினுள் சென்று பார்த்தபோது தாலிக் கொடி, 3 மோதிரங்கள், ஒரு சோடி காப்பு என்பன திருடிச் செல்லப்பட்டது தெரியவந்தது. உடனே ஊரவர்களின் உதவியுடன் அவரை விரட்டிச் சென்றுள்ளனர். பலாலி பொலிஸ் நிலையத்தை அண்மித்த பகுதியில் வைத்து அவரை மடக்கிப்பிடித்துள்ளனர்.
வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டார். சிங்கள மொழியிலும் அந்தப் பெண் சரளமாக உரையாடுகின்றார். அவரது கைப்பையில், திருடப்பட்ட நகைகள் காணப்பட்டதாக பொலிஸார் கூறுகின்றனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஓ,26)

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு...

கவுக்கு 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை உயர் நீதிமன்றால் இன்று விதிக்கப்பட்டுள்ளது. சிசிர டி ஆப்ரூ, விஜித் மல்கொட மற்றும் பிரிதி பத்மன் சூரசேன ஆகிய நீதிபதிகள் ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்ப்பை வழங்கியது. 2017ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி அலரிமாளிகையில் அப்போதைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்திய பின்னர் ஊடகங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வழங்கிய கருத்தை அடிப்படையாக வைத்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன், இலங்கையிலுள்ள பெரும்பாலான நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் ஊழல் மோசடி நிறைந்தவர்கள் என்று விமர்சித்திருந்தார். இந்தக் கருத்தை அடிப்படையாக வைத்து சிங்கள ராவய அமைப்பின் செயலரான மாகல்கந்தே சுதத்த தேரர் மற்றும் ஓய்வுபெற்ற விமானப்படை சிப்பாய் சுனில் பெரேரா ஆகியோரால் உயர் நீதிமன்றில், நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
ரஞ்சன் ராமநாயக்க நாட்டின் நீதித்துறை மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்புக்கு உட்படுத்தியதாகவும், நீதிமன்றத்தை அவமதித்ததாகவும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டிருக்கின்றனர். சட்டமா அதிபர் சுமத்திய குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்படுவதாகத் தெரிவித்து, 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனையை நீதிபதிகள் வழங்கினர்.
நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் சிறைதண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க சிறைக்கு செல்லமுன் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். இதற்காக அவர் கம்பஹாவில் உள் பல்லன்சேன புனர்வாழ்வு மையத்துக்கு தனிமைப்படுத்தல் மற்றும் கொரோனா பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் என்று சிறைத்தலைமையகம் தெரிவித்துள்ளது. (ஓ,இ)

# வான்பாய்கின்றன...

குளம், புதுமுறிப்புக் குளம், வன்னேரிக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், கனகாம்பிகைக் குளம், பிரமந்தனாறு குளம் மற்றும் குடமுருட்டிக்குளம் ஆகிய பெரிய நீர்ப்பாசனக் குளங்கள் அனைத்தும் வான்பாய்கின்றன.

இரணைமடு குளத்துக்கான நீர்வருகை அதிகரித்துவரும் நிலையில் குளத்தின் வான் கதவுகள் 14ம் திறந்து விடப்பட்டுள்ளன என நீர்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

இரண்டு வான் கதவுகள் 2 அடியாகவும், 4 வான் கதவுகள் 1 அடி 6 அங்குலமாகவும், 4 வான் கதவுகள் 1 அடியாகவும், 4 வான் கதவுகள் 6 அங்குலமாகவும் திறந்து விடப்பட்டுள்ளன எனவும் நீர்பாசனத் திணைக்களம் தெரிவிக்கின்றது. தொடர்ச்சியான நீர் வருகை காணப்படுவதனால் திறக்கப்பட்ட வான் கதவுகளின் அளவுகள் அதிகரிக்கப்படலாம் எனவும், கனகராயன் ஆற்றுப் படுக்கையின் கீழ் உள்ள மக்கள் குறிப்பாக பன்னங்கண்டி, கண்டாவளை, முரசுமோட்டை, பரந்தன், ஊரியான், உமையாள்புரம் உள்ளிட்ட பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக செயற்படுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது,

இதேவேளை கிளிநொச்சி நீர்ப்பாசனக் குளங்களான கல்மடு குளம் 10 அங்குலமும், பிரமந்தனாறு குளம் 8 அங்குலமும், கனகாம்பிகை குளம் 5 அங்குலமும் வான் பாய்ந்த வருகின்றது.

மேலும் அக்கராயன் குளம் 7 அங்குலமும், கரியாலை நாகபடுவான்குளம் 10 அங்குலமும், புதுமுறிப்பு குளம் 8 அங்குலமும், குடமுருட்டி குளம் 7 அங்குலமும், வன்னேரிக்குளம் 4 அங்குலமும் வான் பாய்ந்து வருகின்றன.

நீர்நிலைகளை அண்மித்த மற்றும் நீர் வடிந்தோடும் பகுதிகளில் உள்ள மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் தமது வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதுடன், பாதுகாப்பான முறையில் நடந்துகொள்ளுமாறும் நீர்பாசனத் திணைக்களம் தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றது.

இதேவேளை, கனகாம்பிகைக் குளம், இரத்தினபுரம், ஆனந்தபுரம் கிழக்கு, புளியம்பொக்கணை, பெரியகுளம், உழவனூர், பிரமந்தனாறு உள்ளிட்ட தாழ்வு நிலப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தி உள்ளது. தொடர்ச்சியாக மழைவீழ்ச்சி பதிவாகும் என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் எனவும், குளங்கள் மற்றும் நீர் தேங்கியுள்ள ஆழமான பகுதிகளை பார்வையிடச் செல்வதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சிறுவர்கள், முதியவர்கள், மாற்றுத் திறனாளிகள் போன்றோர் தொடர்பில் பொதுமக்கள் அவதானம் செலுத்த வேண்டும் எனவும், இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாக கிராம சேவையாளர் ஊடாக அல்லது பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ந214,6)

# ரூ.1000 விடயத்தில் அரசு கைவிரிப்பு!

கொழும்பு, ஜன. 12

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பில் அரசு கொள்கை ரீதியில் தீர்மானம் எடுத்திருந்தாலும் ஊதிய உயர்வை பெருந்தோட்ட நிறுவனங்களே வழங்கவேண்டும் என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவி யலாளர் மாநாட்டின்போது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரம் பற்றி எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை அரசு எடுத்திருந்தாலும், சம்பள உயர்வு குறித்து தோட்ட நிர்வாகங்களே இறுதி முடிவை எடுக்கவேண்டும். இது விடயத்தில் அரசால் கொள்கை ரீதியிலான முடிவையே எடுக்கமுடியும்.

சம்பள உயர்வு சம்பந்தமாக தொழில் அமைச்சர், தொழிற்சங்கங்கள், முதலாளிமார் சம்மேளனத்தினர் என்று முத்தரப்பு சந்திப்பு நடைபெற்றுவருகின்றது. இதன்படி முடிவு என்னவென்பதை தொழில் அமைச்சர் விரைவில் அறிவிப்பார்' என்றார். (ஒ,44)

# நினைவுத்தூபி விவகாரத்தில் அரசியல் தலையீடு இல்லை

கொழும்பு, ஜன. 12

யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தழிக்கப்பட்டதற்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்று அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு இன்று அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

'யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இருந்த நினைவுத்தூபியை அகற்றுவதற்கான முடிவை உப வேந்தர் உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் அதிகாரிகளே எடுத்திருந்தனர். தற்போது அதனை மீண்டும் நிர்மாணிப்பதற்கான முடிவையும் அவர்களே எடுத்துள்ளனர். குறித்த முடிவுடன் அரசுக்கு எவ்வித தொடர்பும் இல்லை. அழுத்தங்களை பிரயோகிக்கவும் இல்லை' என்றார். (ஒ,5)

# ரஞ்சனின் எம்.பி. பதவி பறிபோகும்?

கொழும்பு, ஜன. 12

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியாக இனம் காணப்பட்டு 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின், நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வெறிதாக்கப்படும் என்று தெரியவருகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் குடியுரிமையை இழக்கப்படும் என்பதற்கு அமைவாக ரஞ்சன் ராமநாயக்கவின் பதவி வறிதாகும் என்று குறிப்பிடப்படுகின்றது. அவரது உறுப்பினர் பதவி வெறிதாகினால், அவரது இடத்துக்கு முன்னாள் இராஜாங்க அமைச்சர் அஜித் மன்னப்பெரும நியமனமாவார்.

இதேவேளை ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்லால் ஜெயசேகரவுக்கு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் நாடாளுமன்ற உறுப்பினரான சத்தியப்பிரமாணம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

# தனிமைப்படுத்தலில் இருந்த பெண் தவறான முடிவெடுத்து உயிர்துறப்பு!

### பருத்தித்துறையில் சோகம்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றாளர் ஒருவரின் தாயார் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார். பருத்தித்துறை புலோலி பகுதியில் இந்தத் துயரச் சம்பவம் இன்று இடம்பெற்றுள்ளது.

புலோலிப் பகுதியில் தொற்றாளராகக் கண்டறியப்பட்டவருடன் தொடர்பில் இருந்தார் என அந்தப் பகுதியில் ஆசிரியர் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டார்.

அவருடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். அவரது பெற்றோரும் பிறிதொரு வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். இன்றைய தினம் அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படுவதாக இருந்தது. இந்த நிலையில் தொற்றாளரின் தாயார் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் இன்னமும் கிடைக்கவில்லை. (ஒ,26)

# பிளாஸ்ரிக் தடைக்கு மாற்று வழிமுறை!!

### மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

எதிர்காலத்தில் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை தடை செய்யப்படவுள்ள நிலையில், சுற்றாடலுக்கு பொருத்தமான மாற்று வழிமுறைகளை அறிந்து கொள்வதற்கு நனோ தொழில்நுட்பத்தின் ஒத்துழைப்பு வழங்கப்பட வேண்டும் என்று சுற்றாடற்றுறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சுற்றாடற்றுறை அமைச்சர் கடந்த 8 ஆம் திகதி நனோ தொழில்நுட்ப அதிகாரிகளுடன் இதுதொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இதனைத் தெரிவித்துள்ளார். நாட்டில் தற்பொழுது ஏற்றுமதி செய்யப்படும் எரிபொருள் வகைகளில் பெரும்பாலானவை மூலப்பொருளாகவே ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இருப்பினும், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி என்ற ரீதியிலோ அல்லது முழுமையாக தயாரிக்கப்பட்ட பொருள்களாகவோ ஏற்றுமதி செய்யப்படுமாயின், தற்பொழுதிலும் பார்க்க பெருந்தொகை வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார். (ற-இ)

# முகக்கவசம் அணியாத 2,344 பேருக்கு பி.சி.ஆர்.

கொழும்பு,ஜன.12

மேல் மாகாணத்தில் கடந்த வாரத்தில் மாத்திரம் முகக்கவசம் அணியாத 2 ஆயிரத்து 334 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். அதன்படி, நேற்றுமுன்தினம் மாத்திரம் 121 பேர் குறித்த பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார். இந்தப் பரிசோதனை முடிவுகளுக்கு அமைவாக 46 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 2 ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# கிழக்கு முனையத்துக்கு எதிரான போராட்டம்!!

## பின்புலத்தில் சீனா என்கின்றது இந்தியா

கொழும்பு, ஜன.12

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனை யத்துக்கு எதிரான போராட்டங் களுக்குப் பின்புலத்தில் சீனாவின் புலனாய்வுப் பிரிவு இருக்கின்ற தென புதுடில்லி கவலை தெரிவித் துள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரின் கொழும்பு வருகை புதுடில்லியின் கவலைகளால் தூண்டப்பட்ட ஒன்று எனவும் இவரின் வருகை ஐந்து நாள்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனைய முதலீட்டில் இந்திய அரசாங்கத் தின் பங்கு இல்லாத போதும் அதில் தனியார்துறை முதலீடு அவசியம் என்பது இந்தியாவின் நிலைப்பாடென ஜெய்சங்கரால் இலங்கை அரசாங்கத்துக்குக் கூறப் பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் இந்தியாவின் முதலீட்டை எதிர்ப் பது மற்றும் திருகோணமலையில் எரிபொருள் குதங்களுக்கு எதி ரான நிலைப்பாட்டை ஊக்குவிப் பது ஆகிய விடயங்களில் சீனா பின்னால் இருந்து செயற்படுகிற தென இந்தியா கருதுகிறது என வும் ஆங்கில ஊடகம் தெரிவித் துள்ளது. (ற-இ)

## சுகாதார விதிமீறல்; கைதுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.12

மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் கடந்த 24 மணித்தியா லங்களில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 23பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதிப்பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் சுகாதார விதிகளை மீறிய குற்றச்சாட்டுக் களின் அடிப்படையிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய கடந்த வருடத்தின் ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரை யிலான காலப்பகுதி வரையில் சுகா தார விதிகளை மீறினர் என்ற குற் றச்சாட்டில் 2ஆயிரத்து 438 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## மஹிந்தவின் ஊடக பணிப்பாளர் கைது

கொழும்பு, ஜன. 12

வாகன விபத்து தொடர்பில் மஹிந்த ராஜபக்சவின் ஊடகப் பணிப்பாளர் விஜயானந்த ஹேரத் கைதுசெய்யப்பட்டார்.

நவகமுவ பிரதேசத்தில் வைத்து தன்னுடைய வாகனத்தில் இரண்டு நபர்களை முட்டி மோதிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலே அவர் கைது செய்யப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது. (ரி5)

## வெளிநாடுகளில் இருந்து மேலும் 434 பேர் வருகை

கொழும்பு, ஜன.12

வெளிநாடுகளில் இருந்து மேலும் 434 பேர் இன்று அதி காலை நாட்டை வந்தடைந் துள்ளனர்.

கட்டாரில் இருந்து 311 பேரும் ஐக்கிய அரபு இராச்சி யத்தில் இருந்து 46 பேரும் மாலைதீவில் இருந்து 76 பேரும் சீனாவில் இருந்து ஒருவருமே நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ச-இ)





## மரநடுகை

கிளிநொச்சி, ஜன.12

கிளிநொச்சி உருத்திரபுரம் விளை யாட்டுக்கழகத்தால் 2021ஆம் ஆண்டின் முதலாம் கட்ட மரந டுகை செயற்றிட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற் றது.

உருத்திரபுரம் விளையாட்டுக்கழக வளாகத்தை பசுமைமிக்க சூழலாக அபிவிருத்தி செய்யும் முகமாக வருடாந்தம் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-222)



## விவேகானந்தரின் பிறந்த நாள்: தடைவிதித்தனர் சுகாதாரப்பிரிவினர்

### மீறினால் தனிமை என எச்சரிக்கை

வவுனியா, ஜன.12

சுவாமி விவேகானந்தரின் 158 ஆவது பிறந்ததினம் இன்று பரவலாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வவுனியா புகையி ரத நிலைய வீதியில் அமைந் துள்ள சுவாமி விவேகானந்தரின் நினைவுத்தூபி நகரசபையினரால் துப்புரவுசெய்யப்பட்டு, பிறந்த நாளை அனுஷ்டிப்பதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அதற்கு சுகாதாரப் பிரிவினர் தடைவிதித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அண்மைய நாள்களாக சடுதியாக அதிகரித்துவரும் நிலையிலேயே, சுகாதார பிரிவினரால் இத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளதுடன் உத்தரவை மீறி பிறந்த தினம் அனுஸ்டிக்கப்பட் டால், நிகழ்வில் பங்குபற்று வோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனவும் எச்சரிக்கை பிறப்பித்துள்ளனர். இதன் காரணமாக இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவி ருந்த சுவாமி விவேகானந்தரின் 158வது பிறந்ததினம் நிகழ்வு நிறுத்தப்பட்டுள்ளது. (ந18)

## 32 பாடசாலைகள் மூடல்

மட்டக்களப்பு, ஜன. 12

கிழக்கு மாகாணத்தில் தனி மைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள 32 பாட சாலைகளை மீள் அறிவித்தல் வரும் வரை தொடர்ந்து மூடுவதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது. காத்தான்குடியில் 25 பாடசாலைகள், கல்முனை யில் 5 பாடசாலைகள், திருக் கோவில் ஒரு பாடசாலை மற்றும், அம்பாறையில் ஒரு பாடசாலைகளுமே மீள் அறிவித்தல் வரும்வரையில் மூடப்பட்டுள்ளன. ஏனைய பாடசாலைகள் நேற்று முதல் கற்றல் நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்டுள் ளன. (ரி5)

## உள்ளூராட்சித் தேர்தல் முறைமை: மீள்பரிசீலனைக்கு குழு நியமனம்

கொழும்பு, ஜன.12

உள்ளூராட்சித் தேர்தல் முறைமை தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்காக மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஜனக பண்டார தென் னகோன் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூ ராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளரும் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் செயலாளருமான ஆர்.ஏ.ஏ.கே. ரணவக்கவின் தலைமையில் இக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழுவில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே, காணி அமைச் சின் முன்னாள் செயலாளர் ஜயலத் ரவி திஸாநாயக்க ஆகி யோர் அங்கத்தவர்களாக நியமிக் கப்பட்டுள்ளனர். உள்ளூராட்சி மன்றத்தேர்தல் கட்டளை சட்டத் தில் அறிமுகம் செய்யப்பட்ட விகிதாசார பிரதிநிதித்துவ கலப்பு முறையின் காரணமாக உள்ளூ ராட்சி நிறுவனங்களின் ஸ்திரத் தன்மை பாதிக்கப்பட்டது என பலதரப்புக்களிடமிருந்து முறை பாடுகள் கிடைத்திருந்த நிலை யில், அவற்றை ஆராய்ந்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப் பிக்குமாறு குழுவுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## பொங்கல் பொருள்கள் வழங்கல்

தைப் பொங்கல் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் 300 பேருக்கு பொங்கல் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால், சங்க மண்டபத்தில் வைத்து அந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-9)

# வவு.நகரில் நேற்று மட்டும் 1100 பி.சி.ஆர்

வவுனியா, ஜன.12

பட்டாணிச்சூர் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பட்டாணிச்சூர் உட்பட சில கிராமங்கள் முடக்கப்பட்டதுடன், இத் தொற்றாளர்களுடன் தொடர்புடைய நகர வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

பகுதி பகுதியாக முடிவுகள் வெளியாகிய நிலையில் வவுனியா நகரில் இதுவரை 103 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதன் பிரகாரம் பசார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதி , ஹொறவப் பொத்தானை வீதி, மில் வீதி, சூசைப்பிள்ளையார் குளவீதி , முதலாம் குறுக்குத்தெரு, இரண்டாம் குருக்குத்தெரு, பழைய பேருந்து நிலையம் என்பன பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளமையுடன் அப்பகுதி வர்த்தக நிலைய ஊழியர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனையும் மேற் கொள்ளப்பட்டது .

அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் மாத்திரம் பழைய பஸ் நிலையம், கொரவப்பொத்தான வீதி , புகையிரத நிலைய வீதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை மையத்தில் 1100 நபர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் கடந்த இரு வாரங்களுக்குள் பட்டாணிச்சூர் பகுதியில் 13 பேரும் நகர வர்த்தக நிலைய பரிசோதனையில் 103 பேரும் வவுனியா வைத்தியசாலையில் 7 பேரும் புளியங்குளத்தில் ஒருவரும் உட்பட 124 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (ந-18)




## கிண்ணியாவில் மேலும் 4 தொற்றாளர்

திருகோணமலை, ஜன.12

திருகோணமலை மாவட்டத்தில் , கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதியில் நேற்று மதியம் மேற் கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனை மூலம் நான்கு புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் நால்வரும், கிண்ணியா, மாஞ்சோலைசேனை, மையவாடிக்கு அருகில் வசித்து வருபவர்கள் எனவும் சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார். (ச-இ)

## மட்டக்களப்பில் நேற்றும் 12 தொற்றாளர்

மட்டக்களப்பு, ஜன.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றையதினம் மேலும் 12 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் 11 பேர் சுகாதார துறையைச் சேர்ந்தவர்கள் என மட்டக் களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 387 பேர் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார். (ச-இ)

## கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் மேலும் 6 தொற்று

கொழும்பு, ஜன.12

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தைச் சேர்ந்த 6 ஊழியர்கள் கொரோனாத் தொற்றுடன் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் இதுவரை 599பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என சுகாதார சேவைகளின் மாவட்ட பணிப்பாளர் டாக்டர் மிகாரா எப்பா தெரிவித்தார். (ச-இ)

## விபத்தில் இளைஞர் சாவு

திருமலை, ஜன.12

திருகோணமலை ஹொரவப்பொத்தானை பிரதான வீதி கன்னியா கற்குவாரி வளைவில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பருப்புக்கடந்தான் கிராமத்தைச் சேர்ந்த 25 பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. சமூக சேவையாளர் பி.வி. டக்ஸனால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-56)

## வவுனியா விவசாயிகளுக்கு உர விநியோகம்

வவுனியா, ஜன.12

வவுனியா மாவட்டத்தில் 35 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில், இம்முறை பெரும் போக நெற் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

பருவ மழை மூலம் வவுனியாவில் குளங்கள் நிரம்பியுள்ளன. இந்நிலையில் மாவட்டத்தில் விவசாயிகளுக்குத் தேவையான உரம் வவுனியாவில் உள்ள 12 விவசாய சேவைகள் மத்திய நிலையங்கள் ஊடாக தாமதம் இன்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என விவசாய சேவைகள் உதவி ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ந)



# முல்லையில் தொடர் மழை; பயிர்ச்செய்கைக்கு ஆபத்து

### வான் பாயும் 11 குளங்கள்; மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஜன.13

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது நாளாகவும் தொடர்ச்சியாக மழை பெய்துகொண்டிருக்கும் நிலையில், மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் வெலிஓயா பிரதேசத்தில் 150 மில்லி மீற்றர் மழையும், தண்ணீர் முறிப்பு பகுதியில் 124 மில்லி மீற்றர் மழையும், ஐயன்கன் குளம் பிரதேசத்தில் 125 மில்லி மீற்றர் மழையும், ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 93 மில்லி மீற்றர் மழையும் பதிவாகியுள்ளது என மாவட்ட நீர்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், தண்ணீர்முறிப்பு குளத்தின் நீர்வரத்து அதிகரித்துவரும் நிலையில் குளத்தின் வான்கதவுகள் மூன்றும் திறந்துவிடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக பெய்துவரும் மழை காரணமாக தாழ் நிலப் பிரதே சங்களில் வெள்ளம் நிரம்பியுள்ளதுடன் மாவட்டத்தின் வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 11 குளங்களும் நிரம்பி வான்பாய்கின்றன. மாவட்டத்தில், இதுவரை பெரியளவில் பாதிப்புக்கள் எவையும் பதிவாகாத நிலையில் தாழ் நிலப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் மக்களை பாதுகாப்பாக இருக்குமாறு நீர்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதேவேளை, தொடர் மழை காரணமாக விளைந்து வரும் நெற்பயிர்கள் அழிவைச் சந்திக்கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ந-19)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்?

கொழும்பு, ஜன.12

அடுத்த சில தினங்களில் அமைச்சரவையில் பெரிய மாற்றங்கள் செய்யப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த காலம் முழுவதும் கடும் எதிர்ப்புகளை முன்வைத்து வரும் நீதியமைச்சு மற்றும் துறைமுகம், கப்பல் துறை அமைச்சு உட்பட பல முக்கிய அமைச்சுப் பொறுப்புகளில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளன எனக் கூறப்படுகிறது. இந்த அமைச்சரவை மாற்றத்துக்கான வரைவு ஒன்றை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ச உருவாக்கி வருகின்றார் எனத் தெரிய வருகிறது. இந்த அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான டயனா கமகேவுக்கு ராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.

அமைச்சுப் பதவிகளில் நியமிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு வழங்கப்பட்ட துறைகளில் கடந்த சில மாதங்களாக ஒரு சிலர் மாத்திரமே திருப்தியடையக் கூடிய பணிகளை செய்துவருகின்றனர் எனவும் இது தொடர்பாக ஜனாதிபதி கடும் அதிருப்தியில் இருக்கின்றார் என்றும் சிங்கள ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-இ)



கொரோனாத் தொற்றுக்குள்ளான நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, கடந்த 5 ஆம் திகதி தனது பிறந்தநாளை வெகுவிமர்சையாக கொண்டாடியுள்ளார். இந்த விருந்துபசாரத்தில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த, அமைச்சின் செயலாளர் பியத்பந்து விக்ரம உள்ளிட்ட பலரும் கலந்துக்கொண்டனர். (ந-இ)

# எதிர்வரும் பெப்ரவரியில் நாட்டுக்குத் தடுப்பூசிகள்

## இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

எதிர்வரும் மாதம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனெகா தடுப்பூசியை இந்தியா மூலமாகவும், பைசர் பயோஎன்டெக் தடுப்பூசியை உலக சுகாதார அமைப்பின் மூலமாகவும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் ஒக்ஸ்போர்ட்அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது குறித்து இந்தியாவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை இடம்பெற்றுவருகின்றது எனவும் தெரிவித்தார். அண்மையில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கருடனான சந்திப்பின்போது, கொரோனாத் தடுப்பூசியைப் பெறுக் கொள்ள இந்தியாவின் உதவியை இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. கோவக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் 20 சதவீத மக்களை உள்ளடக்கும் வகையில் தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என உலக சுகாதார அமைப்பு உறுதியளித்திருந்தது. இந்த நிலையில் உலக சுகாதார அமைப்பு பைசர்பயோஎன்டெக் தடுப்பூசியை வழங்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கொரோனாத் தடுப்பூசியைப் பெறுபவர்களின் முன்னுரிமைப் பட்டியலை சுகாதார அமைச்சு ஏற்கனவே வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

ஈஸ்டர் தாக்குதல்:

# குற்றவாளிகள் எவரும் தண்டிக்கப்படவில்லை!

## அரசைச் சாடுகிறது ஐ.ம.சக்தி

கொழும்பு, ஜன.12

இலங்கையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குப் பொறுப்பான எவரும் இதுவரை நீதிமன்றின் மூலம் தண்டிக்கப்படவில்லை என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, அமெரிக்காவில் மூன்று பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டினார்.

இந்தத் தாக்குதல் இடம்பெற்ற போது நல்லாட்சி அரசாங்கத்தின் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன எனத் தெரிவித்த அவர், தற்போது வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் இவற்றை மறுக்கின்றேன் எனக் கூறினார்.

இந்தத் தாக்குதல் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்கோ அல்லது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ருவான் விஜேவர்த்தனவுக்கோ எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் இந்த விவகாரத்தில் பொறுப்புக் கூறவேண்டிய இந்த அரசாங்கம் கைது நடவடிக்கைகளை மட்டும் செய்யாமல் அவர்களை நீதிமன்றங்களில் முன்னிலைப் படுத்தி தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (ந-இ)

பிரதமர் மஹிந்தவின்

# ஒருங்கிணைப்பு செயலாளருக்கும் தொற்று உறுதி!

கொழும்பு. ஜன.12

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அரசியல் விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர் இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் சி.சி.டி.வி. காணொலிக் காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு அவருடன் தொடர்புகளைப் பேணிய நபர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த நிலைமை காரணமாக நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளுக்கு எந்த தடையும் இல்லை என்றும் வழக்கம் போல கடமைகள் மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ந-இ)

தொற்றுக்குள்ளான

# ஒருங்கிணைப்பு செயலாளருடன் மகிந்த தொடர்பிலிருக்கவில்லை

## சாட்சி சொல்கிறார் யோசித

கொழும்பு, ஜன.12



பிரதமர் மகிந்த ராஜபக்ச கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள தனது ஒருங்கிணைப்பு செயலாளர் குமாரசிறி ஹெட்டிகேயுடன் தொடர்பிலிருக்கவில்லை என யோசித ராஜபக்ச தெரிவித்துள்ளார். குமாரசிறி ஹெட்டிகே பத்து நாள்களுக்கு முன்னரே பிரதமரைச் சந்தித்தார்.

எனினும் அவருடன் தொடர்பிலிருந்த பிரதமரின் அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள் மூவர் தனிமைப்படுத்தலை முன்னெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களில் எவரும் சமீப நாள்களில் பிரதமருடன் நெருங்கிய தொடர்பிலிருக்கவில்லை. ஹெட்டிகேயுக்கு அலரிமாளிகையில் அலுவலகமில்லை என்று யோசித மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஆணைக்குழு அறிக்கையின் பின்னரே சட்ட நடவடிக்கை

## ஏப்21 தாக்குதல் தொடர்பில் சரத்

கொழும்பு, ஜன.13

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்காக காத்திருப்பதால் சட்ட நடவடிக்கை எடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மேலும், இவ் விசாரணை அறிக்கை ஜனவரி 31 ஆம் திகதி கிடைக்கப்பெறும் என்று நான் எதிர்பார்க்கின்றேன். அதனை ஆராய்ந்த பின்பு மேலும் பல சாட்சியங்கள் ஆய்வு செய்யப்படும்.

பொறுப்புக் கூறவேண்டியவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபரால் 12 சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களில் அமெரிக்க பிரஜைகளும் இருப்பதால், பொருத்தமான தகவல்கள் அமெரிக்க நீதிமன்றங்களுக்கும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். (ந-இ)



# நாடாளுமன்றத்தை மிரட்டும் கொரோனா

## சுயதனிமைப்படுத்தலில் எம்.பிக்கள் 31 பேர்

கொழும்பு, ஜன.12

நாட்டில் 31 நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுயதனி மைப்படுத்தப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை, கொவிட்19 தொற்று உறுதி செய்யப்பட்ட நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக் காரவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் என கண்டறியப்பட்ட 10 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோத னைகள் மேற்கொள்ளப்பட்டு, அவர்களை சுயதனிமைக்கு உட்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதே வேளை அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுடன் தொடர்பு டைய 15 நாடாளுமன்ற பணிக்குழாமினரும் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதமரின் அரசியல் விவகாரங்களுக்கான இணைப்பு செயலாளர் குமாரசிறி ஹெட்டிகே ஆகி யோருக்கு தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ள நிலையில் இவர்களுடன் தொடர்பில் இருந்த 31 நாடாளுமன்ற உறுப்பினர்களை சுய தனி மைப்படுத்திக்கொள்ளுமா றும் கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (ந-இ)

# ரயில் பயணங்களுக்கான ஆசன முற்பதிவுகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 12

ரயில் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வுள்ளமையால், ஆசன முற்பதிவுகளை இன்று முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள் ளது.

சுகாதார விதிமுறைகளுக்கமைய எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் தூரப் பிரதேசங்க ளுக்கான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் டிலந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதற்கமைய, ரயில்களில் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுவது மற்றும் யாசகம் பெறுவது உள்ளிட்ட அனைத்துக்கும் முற்றாக தடை விதிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

மேலும், எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் தினசரி போக்குவரத்தில் ஈடுபடும் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் தெரிவித்தார். (ரி5)



# ஜனாதிபதியை சந்தித்தார் பங்களாதேஷ் தூதுவர்!!

கொழும்பு, ஜன.12

இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பங்களாதேஷ் மக்கள் குடியரசு உயர் ஸ்தானிகர் தாரிக் முகம்மத் ஆரிபுல் இஸ்லாம், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் தனது நற்சான்றுப் பத்திரத்தை நேற்று ஜனாதிபதி மாளிகையில் வைத்துக் கையளித்தார்.

இச் சந்திப்பில் இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத் துள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளித்த ஜனாதிபதி, பங்களாதேஷ் உள்ளிட்ட பிராந்திய நாடுகளுடன் அடையாளம் காணப்பட்ட துறைக ளில் இருதரப்பு உறவை மேம்படுத்துவது தனது எதிர்பார்ப்பாகும் என்றும் தெரிவித்தார்.(றஇ)

# கொவிட் 19 தொற்றுப் பரவல்; மக்கள் விழிப்புடன் இருக்கவும்

கொழும்பு, ஜன. 12

மேல்மாகாணம் உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று பரவத்தொடங்கியுள்ளது என தொற்றுநோயியல் பிரிவின் தலைமை அதிகாரி சுடத்சமரவீர தெரிவித்தார்.

மேல்மாகாணத்திலும் கொழும்பிலும் வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டுள்ள போதி லும் சில பகுதிகளில் புதிய தொற்றாளர் கள் இனங்காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்தார். இதனை நாங்கள் எவ்வாறு கையாள்கின்றோம் என்பதே முக்கியமானது. எனினும் வைரஸினை கட்டுப்படுத்த முடியும் என நம்பிக்கை வெளியிட்ட அவர் வியாழக்கிழமை முதல் நீண்ட விடுமுறைகள் வருவதன் காரண மாக மக்கள் தங்கள் பகுதிகளிலிருந்து வேறு இடங்களுக்கு செல்ல வேண்டாம் எனவும், அவதானத்துடன் இருக்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி5)

### தென்மராட்சியில்

# அடை மழையால் 40 பேர் பாதிப்பு

சாவகச்சேரி,ஜன. 13

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் பெய்த அடைமழை காரணமாக 17 வீடுக ளுக்குள் வெள்ளம் புகுந்ததால் 40 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர்.

கோயிற்குடியிருப்பு பிரிவில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும், குடமியன் பிரிவில் 2 குடும் பங்களைச் சேர்ந்த 3 பேரும்,மிருசுவில் வடக்குப் பிரிவில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேரும், மறவன்புலவு பிரிவில் 2 குடும்பத்தைச் சேர்ந்த 7 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது. பிரதேசத்தின் பல கிராம அலுவலர் பிரிவுகளில் வெள்ளம் அதிகரித்துள்ள நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

# தலதா மாளிகைக்கு சென்ற சுற்றுலாவிகளுக்கு எதிர்ப்பு!

கொழும்பு, ஜன.12

உக்ரைன் நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் 165 பேர் கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு நேற்றுச் செல்லமுற்பட்ட வேளை, அங்கு அவர்களுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் உக்ரைன் குழுவுக்கு வாவி பாதை ஊடாக தலதா மாளிகைக்குள் நுழைய அனுமதி வழங்கப்பட்டிருந்தது. உள்ளூர் யாத்திரிகர்க ளுக்கு வழமையான வழி திறந்துவிடப்பட்டி ருந்தது. இதன்போது அங்கு வருகை தந்த தம்மாலங்கார தேரரும், உக்ரைன் பிரஜை களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்ததுடன், கொரோ னாத் தொற்றால் உக்ரைன் நாடு முடக்கப்பட் டுள்ள நிலையில், அந்நாட்டு சுற்றுலாப் பயணி கள் இலங்கைக்கு வருவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாதென எனவும் தெரிவித் தார். 'மகாசங்கத்தினரையும் மக்களையும் ஏமாற்றி முன்னெடுக்கப்படும் இந்தச் செயற் பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் நாட்டின் சுற்றுலாத்துறையை மேம்ப டுத்த வேண்டும் ஆனால் அதை முன்னெ டுப்பதற்கு இது சரியான தருணமல்ல என்றும் தெரிவித்துள்ளார். (ற-இ)



# ஜனாஸா எரிப்பு விவகாரம் ஜெனிவாவில் எதிரொலிக்கும்

கொழும்பு, ஜன. 12

கொரோனா தொற்றால் உயிரிழக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்கள், அவர்களின் மத நம்பிக்கைக்கு மாறாக எரிக்கும் நடைமுறை தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46ஆவது அமர்வில், அதனோடு இணைந்ததாக நடக்கும் பக்க அமர்வுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட சில முஸ்லிம் அமைப்புக்கள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஒ.இ)

# சுருள் பாசி (ஸ்பைருலினா)

கஸ்தூரி ஜெயகுமார் (27ம் அணி)



ஸ்பைருலினா என்பது சயனோ பக்டீரியாவின் ஒரு இனமாகும். அவை பூமியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஏனெனில் அவையே முதல் ஒளித்தொகுப்பு உயிரினங்களாக நம்பப்படுகின்றது. சயனோபக்டீரியாவின் தோற்றம் 2 முதல் 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டது. இது ஒரு ஒளித்தற்போசணை குழுவைச் சேர்ந்த கிராம் எதிர்மறை பக்டீரியாக்களின் இனமாகும். இது பக் டீரியாவின் சில குணாதிசயங்களையும் அல்காக்களின் தன்மைகளையும் கொண்டுள்ளது. அவை அளவு, வெளிப்புற தோற்றம், ஒளி, ஊட்டச்சத்துக்கள் மற்றும் காபனீரொட்சைட்டுக்கான தேவைகள் போன்றவற்றில் அல்காக்களைப் போலவே இருக்கின்றன, ஆனால் மற்ற பக்டீரியாக்களைப் போலல்லாமல் அவை நீலப் பச்சை மற்றும் பச்சை நிறமிகளைக் கொண்டிருக்கின்றன. அத்துடன் ஒளிச்சேர்க்கை செய்யும் தன்மையும் கொண்டுள்ளது.

எனவே, அவை நீலப் பச்சை அல்கா என்றும் அழைக்கப்படுகின்றன. நீலப் பச்சை அல்காக்கள் சயனோபைற்றுக்கள், சயனோபக்டீரியா மற்றும் மிக சமீபத்தில் சயனோபுரோக்கரியோட்டாக்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. சயனோபக்டீரியா என்பது தற்போசணையாக்கிகள் ஆகும். ஆவை காபனீரொட்சைட்டை தாழ்த்தக் கூடிய பென்டோஸ் பொஸ்பேட் சுழற்சியின் மூலம் பதிக்கின்றன. மேலும் அவை நைதரசனை ஒருங்கிணைக்கும் செயல்முறைகள் மூலம் சுற்றுச்சுழலில் இணைகின்றன. சிலர் ஸ்பைருலினா பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள். இது ஒரு கலப்புரத பாசி வகையைச் சேர்ந்தது. இதன் முழுமையான பயன்களையும், சக்தியையும் முன்னரே அறிந்திருந்தால், இன்று நம்மைத் தாக்கும் பல பிரச்சனைகளில் இருந்து விலகி இருக்கலாம். சயனோபக்டீரியா என்பது உணவு, தீவனப் பொருள்கள், இரசாயனங்கள் மற்றும் எரிபொருள்கள் போன்ற தயாரிப்புகளின் நிலையான உற்பத்திக்கான ஒரு நம்பிக்கைக்குரிய உயிரினமாகும்.

சயனோபக்டீரியாவிலிருந்து ஏராளமான வணிக ரீதியான தயாரிப்புக்களைப் பெறலாம். மனித மற்றும் விலங்கு ஊட்டச்சத்துக்கான தயாரிப்புகள், ஒன்றிற்கு மேற்பட்ட இரட்டைப் பிணைப்புக் களைப் கொண்ட கொழுப்பமிலங்கள், ஒக்ஸிஜனேற்றிகள், நிறப்பொருட்கள், உரங்கள், மண்வளமாக்கிகள். அழகுசாதனப் பொருட்கள், மருந்துகள், பொலிசக்கரைட் தயாரிப்புக்களில் பங்கு வகிக்கின்றது. சயனோபக்டீரியா இழைய அமைப்பின் மூலமாக மண் துளைகளை அதிகரித்து மண்ணின் வளத்தை மேம்படுத்துகிறது. அத்துடன் ஓமோன்கள், விட்டமின்கள் மற்றும் அமினோ அமிலங்கள் போன்ற வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருள்களை வழங்குதல், நீர் வைத்திருக்கும் திறனை அதிகரித்தல், உக்கல் செயற்பாட்டின் மூலம் மண்ணின் உயிர்வளத்தை அதிகரித்தல், மண்ணின் உவர்த்தன்மையைக் குறைத்தல், களை வளர்ச்சியைத் குறைத்தல் மற்றும் அதிகரிக்கும் கரிம அமிலங்களை வெளியேற்றுவதன் மூலம் மண் பொஸ்பேட் அளவை அதிகரித்தல் போன்ற செயற்பாடுகளின் மூலமும் மண் வளத்தை அதிகரிக்கின்றது. உலகின் மிகவும் பிரபலமான ஊட்டச்சத்திற்கான பிரதியீடாக ஸ்பைருலினா அமைகின்றது ஏனெனில் இது உடலுக்கும் மூளைக்கும் பயனளிக்கும் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் மற்றும் அன்டிஒட்சிசன்களை கொண்டுள்ளது. இது அதிகளவான ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது. ஸ்பைரருலினாவில் பச்சையம் அதிகம் உள்ளதால் அது பச்சை நிறத்தோற்றத்தை அளிக்கின்றது. மேலும் இது இந்தியா, ஆபிரிக்கா, மெக்ஸிகோ, இலங்கை போன்ற வெப்பமான பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் அதிகம் வளரக்கூடிய பாசி ஆகும். இதனை மீன்கள் சாப்பிடுவதால் தான், மீன்களில் புரதச்சத்துக்கள் அதிகமாகக் காணப்படுகின்றது.

### ஸ்பைருலினா வளர்ப்பு முறை

சிமெந்துத்தொட்டி முறை. ஆழமற்ற உலோக தொட்டி மற்றும் பொலித்தீனால் மூடப்பட்ட குழி முறைகள் சயனோபக்டீரியாவை (ஸ்பைருலினா) உற்பத்தி செய்ய பயன்படுத்தப்படலாம். பெரிதளவில் ஸ்பைருலினாவை உற்பத்தி செய்வதற்கு மூடிய மற்றும் திறந்த குளங்களைப் பயன்படுத்தலாம். ஆய்வுகூடங்களில் ஸ்பைருலினா வளர்ப்பதற்கு BG11 வளர்ப்புடகமும் Zarrouks வளர்ப்புடகமும் பயன்படுத்தப்படுத்தப்படுகின்றது. ஸ்பைருலினா வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் காரணியாக ஊட்டச்சத்துக்கள் அமைகின்றன. மேலும் பெரிதளவிலான ஸ்பைருலினா வளர்ப்பின் செலவுகளில் ஆள்கூலிச் செலவே அதிகம் செல்வாக்குச் செலுத்துகின்றது.



ஸ்பைருலினா வளர்ப்பில் ஊட்டச்சத்துக்களின் பங்கு ஸ்பைருலினா வளர்ப்புக்கு காபன் ஒரு முக்கியமான ஊட்டச்சத்து ஆகும். ஸ்பைருலினா வளிமண்டல காபனீரொட்சைட் மற்றும் கலங்களிற்கிடையிலான இருகாபனேற்றுக்கள் முறையே சேதன மற்றும் அசேதன காபனை சக்தி மூலமாக பயன்படுத்துகின்றது. இருகாபனேற்றை $CO_2$ ஆக மாற்ற கார்போனிக் அன்ஹைட்ரேஸ் நொதியம் பயன்படுத்தப்படுகிறது. சயனோபாக்டீரியா வளிமண்டல $CO_2$ வை அதிக விகிதத்தில் பயன்படுத்துகிறது, எடுத்துக்காட்டாக ஸ்பைருலினா 38% வளிமண்டல காபனீரொட்சைட்டை பதிக்கும் திறன் கொண்டுள்ளது. காபனுக்குப் பின் ஸ்பைருலினா உற்பத்தி செய்வதற்கு நைதரசன் முக்கியபங்கு வகிக்கின்றது, ஸ்பைருலினாவின் உற்பத்தித் திறன் நைதரசன் மூலங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் வகையில் தங்கியுள்ளது. அமோனியா நைதரசன் பெரும்பாலும் விரும்பப்படும் நைதரசன மூலமாகும். ஸ்பைருலினா உற்பத்தியிற்கு அதிக அளவு பொஸ்பரஸ் தேவையில்லை, ஸ்பைருலினா உடல் நிறையில் 1வீத பொஸ்பரஸ் உள்ளடக்கம் வளர்ச்சிக்கு போதுமானது மற்றும் பொஸ்பரஸின் விருப்பமான வடிவம் ஓதோ பொஸ்பேட் ஆகும். C, N, P தவிர சில முக்கியமான ஊட்டச்சத்துக்கள் உள்ளன அவையாவன S, K, Na, Fe, Mg, Ca. மேலதிகமாக B, Cu, Mo, Co, V, Se போன்ற சுவட்டு மூலகங்களும் சிறிய அளவில் தேவைப்படுகின்றன. இவை விற்ற மின்களின் உயிர்தொகுப்பிலும் நொதிய தாக்கங்களிலும் பங்களிக்கின்றன.

ஸ்பைருலினாவில் உள்ளடங்கிய ஊட்டச்சத்துக்கள். இந்த ஸ்பைரருலினா மாத்திரை வடிவிலும் மற்றும் கப்ஸ்யுல் வடிவில் கடைகளில் விற்கப்படுகிறது. இதில் ஏராளமான சத்துக்கள் நிறைந்துள்ளன. இதனை இனமும் சிறிதளவு எடுத்து வந்தால், உடலுக்கு வேண்டிய அத்தியாவசிய சத்துக்கள் கிடைத்து, உடலை நோயின் தாக்குதல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஸ்பைருலினாவை தினசரி சராசரியாக 13 கிராம் அளவில் எடுத்துக் கொள்ளலாம். ஒரு நாளைக்கு 10 கிராம் வரை அளவுகள் திறம்பட பயன்படுத்தப்படுகின்றன. இந்த சிறிய அல்கா ஊட்டச்சத்துக்களால் நிரம்பியுள்ளது. ஸ்பைரருலினாவில் 60-70 சதவீத புரதங்கள் உள்ளன. அதாவது பால், முட்டை மற்றும் பருப்பு வகைகளை விட அதிகமான அளவிலான புரதங்கள் ஸ்பைரருலினாவில் உள்ளது. எனவே இதனை தினமும் உட்கொண்டு வருவதன் மூலம் புரதக் குறைபாடு ஏற்படுவது தடுக்கப்படுவதோடு, முடியின் வளர்ச்சியும் அதிகரிக்கின்றது. ஒரு தேக்கரண்டி (7 கிராம்) உலர்ந்த ஸ்பைருலினா தூளில் 4 இராம் புரதம் உள்ளது, விற்றமின் B1 (தயமின்) 11%, விற்றமின் B2 (ரைபோபிளேவின்) 15%, விற்றமின் B3 (நியாசின்) 4%, செப்பு 21%, இரும்பு 11%, சிறிய அளவு மக்னீசியம், பொட்டாசியம் மற்றும் மங்கனீழ ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஒரு தேக்கரண்டி (7 கிராம்) ஸ்பைருலினா சுமார் 1 கிராம் ஒமேகா 6 மற்றும் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் இரண்டையும் சேர்த்து சுமார் 1.51.0 விகிதத்தில் கொழுப்பை வழங்குகிறது. ஸ்பைருலினாவில் உள்ள புரதத்தின் தரம் மிகச்சிறந்ததாகக் கருதப்படுகிறது. முட்டைகளுடன் ஒப்பிடத்தக்கது. இது உங்களுக்கு தேவையான அனைத்து அமினோ அமிலங்களையும் தருகிறது.

சக்திவாய்ந்த ஒட்சிசனேற்ற மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகள் ஒட்சிசனேற்ற சேதம் உங்கள் DNa{ மற்றும் உயிரணுக்களுக்கு தீங்கு விளைவிக்கும். இந்த சேதம் நாள்பட்ட அழற்சியை உண்டாக்கும், இது புற்றுநோய் மற்றும் பிற நோய்களுக்கு பங்களிக்கிறது.

(மறுபக்கம் பார்க்க)

# சுருள் பாசி...



ஸ்பைருலினாவின் ஒட்சியேற்ற எதிரிகள் இச் சேதத்திலிருந்து பாதுகாக்க உதவுகின்றது.

அதன் முக்கிய செயலில் உள்ள கூறு பைகோசயனின் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஒட்சியேற்ற பொருள் ஸ்பைருலினாவுக்கு அதன் தனித்துவமான நீலப்பச்சை நிறத்தையும் தருகிறது. பைகோசயனின் அழற்சி சமிக்ஞை மூலக்கூறுகளின் உற்பத்தியைத் தடுக்கிறது, இது ஒட்சிசனேற்ற மற்றும் அழற்சி எதிர்ப்பு விளைவை வழங்குகிறது.

இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மாரடைப்பு, பக்கவாதம் மற்றும் நீண்டகால சிறுநீரக நோய் உள்ளிட்ட பல கடுமையான நோய்களுக்கு உயர் இரத்த அழுத்தம் ஒரு முக்கிய காரணமாகும். இதை நிவர்த்தி செய்ய 1 கிராம் ஸ்பைருலினா போதுமானதல்ல. சாதாரண நபர்களில் ஒரு நாளைக்கு 4.5 கிராம் ஸ்பைருலினா உட்கொள்வதால் இரத்த அழுத்தம் குறைக்கப்படும் என்று நிஷரூபிக்கப்பட்டுள்ளது. இதற்கு காரணம் நைட்ரிக் ஒக்சைட் அதிகரிப்பதேயாகும், இது உங்கள் இரத்த நாளங்கள் ஓய்வெடுக்கவும், விரிவடைவதற்கும் உதவும் ஒரு சமிக்ஞை மூலக்கூறு ஆகும்.

இரத்தச் சோகைக்கு எதிராக செயற்படும் இரத்தச் சோகைக்கு பல்வேறு வடிவங்கள் உள்ளன, இது உங்கள் இரத்தத்தில் உள்ள ஹீமோகுளோபின் அல்லது சிவப்பு இரத்த அணுக்கள் குறைவதன் மூலம் பொதுவாக ஏற்படுகின்றது. வயதானவர்களில் இரத்த சோகை மிகவும் பொதுவானது, இது பல வீனம் மற்றும் சோர்வு பற்றிய நீண்டகால உணர்வுகளுக்கு வழிவகுக்கிறது. இரத்தச் சோகையின் கொண்ட 40 வயதானவர்களில் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டபோது ஸ்பைருலினா வழங்கப்பட்டவர்களின் சிவப்பு இரத்த அணுக்களின் அளவும் ஹீமோகுளோபின் உள்ளடக்கத்தின் அளவும் நோயெதிர்ப்பு செயற்பாடும் அதிகரித்ததமையும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பைட்டோஹோர்மோன்கள் தொகுக்கும் தாவரங்களின் வளர்ச்சியில் பைட்டோ ஹோர்மோன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. *Auxin, Gilpberelilн, Cytoiknin, Ethylene;* மற்றும் *Absciisc acid* ஆகியவை பைட்டோ ஹார்மோன்களின் ஆகும். அவை விதை முளைப்பு, வேர் உருவாக்கம், புற்கள் உருவாக்கம், களைகள் உருவாக்கம் மற்றும் பழம் கனிய வைப்பது உள்ளிட்ட பல்வேறு உடலியல் செயல்முறைகளை ஒருங்கிணைக்க பங்களிக்கின்றன. *C.ghosie, H.itniricatus and Nostoc sp.* ஆகிய மூன்று சயனோபக்டீரியல் விகாரங்களின் முளைதிறனை அதிகரிக்கின்றது.

N2 பதிக்கும் திறன் நைதரசன் மிக முக்கியமான ஊட்டச்சத்து ஆகும். இது பயிர் உற்பத்தித்திறனை அதிகரிக்கின்றது. இதற்காக செயற்கை நைதரசன் உரங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. செயற்கை உரங்களுக்கு பதிலாக ஸ்பைருலினாவின் பிரதியீடு சேதன விவசாயத்தை நோக்கி சிறந்த படிக்கல்லாகும். ஈரநில மண்ணில், குறிப்பாக நெல் வயல்களில் இயற்கை உயிர் உரமாக உள்ள நுண்ணுயிர் தொகையில் N2 பதிக்கும் சயனோபக்டீரியா ஒரு முக்கிய அங்கமாகும். வளிமண்டல நைதரசனை ஒரு அசேதன வடிவமாக மாற்றுவதன் மூலம் சயனோபக்டீரியாக்கள் மலிவான இயற்கை உயிர் உரமாக செயல்படுகிறது.

உயிரியல் N2 பதிப்பதற்கு சக்திமூலமாக ஒளித்தொகுப்பு மூலம் பதிக்கப்பட்ட காபன் பங்குவகிக்கின்றது. N2 பதிக்கும் நுண்ணுயிரிகளில் நீலப் பச்சை அல்காக்கள் மட்டுமே CO2; மற்றும் நீரிலிருந்து தங்களுக்குத் தேவையான சக்தியை உருவாக்கிக் கொள்கின்றது. சயனோபக்டீரியாவில் நைதரசன் பதிப்பதற்கு நைட்ரஜனேஸ் எனப்படும் நொதியமே காரணமாகும். நைதரசன் பதிக்கக்கும் பொறிமுறையைக் கொண்டிருக்கும் சிறப்பு செல்கள் *Heterocystous* ஆகும்.

சாதாரண மக்கள் மத்தியில் இத்தகைய நன்மையைத் தரும் ஸ்பைருலினாவின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருப்பதன் காரணத்தால், இதன் பாவனை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது. இதன் முழுமையான பயன்களையும், சக்தியையும் முன்னரே அறிந்திருந்தால், இன்று நம்மைத் தாக்கும் பல பிரச்சினைகளில் இருந்து விலகி இருக்கலாம். விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் இதன் பயன்களையும் நன்மைகளையும் பாமரர் முதல் சாதாரண மனிதர்கள் வரை எடுத்துச் செல்வது இயற்கை முறை விவசாயத்துக்கு ஒரு சிறந்த வித்தாகும்.

**"சாதாரண மக்கள் மத்தியில் இத்தகைய நன்மையைத் தரும் ஸ்பைருலினாவின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக இருப்பதன் காரணத்தால், இதன் பாவனை ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படுகின்றது. இதன் முழுமையான பயன்களையும், சக்தியையும் முன்னரே அறிந்திருந்தால், இன்று நம்மைத் தாக்கும் பல பிரச்சினைகளில் இருந்து விலகி இருக்கலாம்."**

# ரிக்கெற் நிதி மோசடி விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, ஜன.12

இணையத்தளம் ஊடாக விமான ரிக்கெற் வழங்கப்படுகிறது எனக் கூறி நிதி மோசடி செய்தவரை கைது செய்வதற்கு மாத்தறை நிதிக் குற்ற விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. முகப்புத்தகத்தில் ரக்கித ஹேமவர்தன என்ற பெயரிலுள்ள இந்த நபர் தொடர்பில் பொலிஸாருக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அவர் இலங்கையின் பிரபல ரிக்கெற் விற்பனை நிலையத்தின் பெயரைப் பயன்படுத்தி ரிக்கெற் நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார். இவர் விமான ரிக்கெற் வழங்குகின்றேன் எனக் கூறி முன்னாள் அமைச்சரின் மகனிடம் பணம் மோசடி செய்துள்ளார். இது குறித்த விசாரணையில் அவரும், அவரது சகோதரி ஆகிய இருவருமே இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

அவரது சகோதரி பணியாற்றிய நிதி நிறுவனத்திடம் பணம் செலுத்த வேண்டும் என சந்தேக நபரால் வெளிநாடுகளில் இருந்து ரிக்கெற்றுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டது எனவும் தெரியவருகின்றது. (ந-இ)

# ஹரீனுக்கு ஆபத்து ஏற்படின் ராஜபக்ச அரசியலுக்கு முடிவு!!!

## எச்சரிக்கிறார் சம்பிக்க

கொழும்பு, ஜன.12

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு அல்லது அவரது பிள்ளைகளுக்கோ ஆபத்து ஏற்பட்டால் அது ராஜபக்ச அரசியல் முடிவை நோக்கி நகர்த்தும் என நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தனது அதிகாரபூர்வ முகநூல் பக்கத்தில் பதிவொன்றை இட்டதன் மூலம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் ஹரீன் ஆற்றிய உரைக்கு பதிலாக ஜனாதிபதி சிறுபிள்ளைத்தனமான விமர்சனத்தை வெளியிட்டுள்ளார். பயங்கரவாதி ஒருவரைக் கொலை செய்வதை ஜனநாயக அரசியல்வாதி ஒருவர் வெளியிட்ட கருத்தை விமர்சனம் செய்வது நாகரிகமானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு சவால் ஏற்படக்கூடும் என கருதும் அரசியல்வாதிகளை ஒடுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது எனவும் தெரிவித்தார்.

ஏகாதிபத்திய நடைமுறைகளுக்கு எதிராக அனைத்து அரசியல் சக்திகளும் அணி திரள்வது அவசியமானது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-இ)